**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம்/சார்பு நீதிமன்றம்**
**பத்மனாபபுரம்**
**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி**

**2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 5-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை மனு எண். 33/2019**

**CNR-TNKK07-000089-2019**

1. பெஸிதா ஜெய மோகனா
2. ஹில்ஜின் ராஜோ
3. பெல்ஜின் ஷாஜோ

... மனுதாரர்கள்

/எதிர்/

1. சாலமன்
2. ஷிஜோ எம். ஷலன்
3. மேலாளர்

நியூ, இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
நாகர்கோவில்.

... எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது 24.04.2026 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. பால்பிள்ளை அவர்கள் ஆஜராகியும், 2-வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. வின்ஸ்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 3-வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. பென்சிகர் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர்

ஒருதலைப்படுத்தப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் எனது கவனமான பரிசீலனையின் கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**உத்தரவு**

மனுதாரர்கள் இம்மனுவை மோட்டார் வாகன சட்டம் பிரிவு 165, 166ன் கீழ் 05.11.2018ம் தேதி மதியம் சுமார் 7 மணியளவில் கோழிப்போர்விளை– பள்ளியாடி ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக குழிக்கோடு ஜங்சன் தாண்டி சற்று வடக்கில் தேவி டிஜிட்டல் ஸ்டுடியோ இடத்தில் வைத்து நடந்த விபத்தில் 1ம் மனுதாரரின் கணவர் காயமடைந்து இறந்து போனதால் மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.50,00,000/– வழங்குமாறும், மேற்படி தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளில் இருந்து தொகை வசூலாகும் தேதி வரை 12% வருட வட்டி மற்றும் செலவு தொகை கோரியும் தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுவின் சுருக்கம்**: -

5.11.2018ம் தேதி மாலை 7மணிக்கு 1ம் மனுதாரர் பள்ளியாடியில் உள்ள உறவினர் திருமண வீட்டிற்கு செல்வதற்காக ஹீரோ ஹோண்டா TN 74 Z 5215 எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் 1வது மனுதாரின் கணவர் ஓட்ட 1வது மனுதாரர் பின்னால் உட்கார்ந்து கோழிப்போர்விளை – பள்ளியாடி ரோட்டில் தெற்கில் இருந்து வடக்காக குழிக்கோடு ஜங்சன் தாண்டி சற்று வடக்கில் தேவி டிஜிட்டல் ஸ்டுடியோ முன் செல்லும் போது அதே ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக வந்த TN 75 S 4223 எண் கொண்ட பஜாஜ் பல்சர் வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை மதிக்காமலும் ரோட்டின் இடது ஓரத்தில் வந்து கொண்டிருந்த தங்களது வாகனத்தின் மீது ரோட்டின் வலது பக்கமாக குறுக்கே வந்து மோதியதில் 1வது மனுதாரரும் அவரது கணவரும் துக்கி வீசப்பட்டதில்

தலை, முகம், கை போன்ற இடங்களில் முறிவு காயங்களும் ஏற்பட்டது. உடனே நாகர்கோவில் சுங்கான்கடையில் உள்ள முத்து நியூரோ சென்டர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு முதல் உதவி சிகிச்சை பெற்று மேல் சிகிட்சைக்காக மனுதாரரின் கணவர் திருவனந்தபுரத்தில் உள்ள அனந்தபுரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்து வந்தார். மேல்சிகிட்சைக்காக மணலியில் உள்ள விஜயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதில் சிகிட்சை பலனளிக்காமல் 20.11.2018 இரவு 7.55 மணிக்கு அனந்தபுரி மருத்துவமனையில் உயிர் இழந்து விட்டார். அவர் நல்ல உடல் நிலையிலும் ஆரோக்கியத்துடனும் இருந்தார். 1ம் மனுதாரரின் கணவரின் இழப்பு குடும்பத்தில் மிகுந்த சிரமத்தையும் பொருளாதார நெருக்கடியையும் கொடுத்துள்ளது. விபத்து தொடர்பாக தக்கலை காவல் துறையினர் 1வது எதிர்மனுதாரர் மீது குற்ற எண். 473/2018 வழக்கு பதிவு செய்து பிரிவுகள் 279, 337, 304(ஏ) வழக்கு பதிவு செய்தார்கள். எனவே பல்வேறு தலைப்புகளின் கீழ் ரூ.50,00,000/- இழப்பீடு கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. 3**-வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது. மனுதாரர்கள் விபத்து தொடர்பான உண்மை சங்கதிகளை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மனுவில் குறிப்பிட்டுள்ள படி சொல்லப்பட்ட நேரம் மற்றும் தேதியில் விபத்து ஏற்பட்டது என்பதை காட்ட எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. 1வது எதிர்மனுதாரருக்கும் வாகன விபத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. 1வது எதிர்மனுதாரர் TN 75 S 4223 என்ற இரு சக்கர வாகனத்தை மெதுவாகவும் கவனமாகவும் சாலை விதிகளுக்கு உட்பட்டு

ஓட்டி வந்தார். இறந்து போன நபரின் கவனமின்மையால் விபத்து ஏற்பட்டது. TN 74 Z 5215 வாகனத்தை இறந்து போன நபர் சாலையின் குறுக்கே ஓட்டி வந்த போது 2வது எதிமனுதாரர் பிரேக் போட்டும் விபத்தை தவிர்க்க இயலவில்லை. மனுதாரர்கள் இறந்து போனவரின் வாரிசுகள் என்பதை நிரூபிக்க வேண்டும். இறந்து போனவரின் வயது வருமானம், தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகப்படியான இழப்பீடு மற்றும் வட்டி விகிதம் காட்டப்பட்டுள்ளது. 1வது எதிர்மனுதாரருக்கு விபத்தின் போது ஓட்டுநர் உரிமம் இல்லை. TN 74 z 5215 வாகனத்திற்கு விபத்து சமயம் உரிய பதிவு சான்று கிடையாது. காலாவதியான பதிவு சான்றின் படி வாகனம் இயக்கப்பட்டுள்ளது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. மனுதாரர்கள் தரப்பில், ம.சா.1 மற்றும் ம.சா.2 விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ–1 முதல் எ.ம.சா.ஆ–5 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **<u>இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சினை யாதெனில்,</u>**

1) *மனு விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது ?*
2) *மனுதாரர்களுக்கு யார் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் ?*
3) *மனுதாரர்கள் கோரியுள்ளபடி இழப்பீட்டு தொகை பெற உரிமை உடையவரா ?*

6. **<u>பிரச்சனை 1:-</u>**

5.11.2018ம் தேதி மாலை 7 மணிக்கு மனுதாரரின் உறவினர் திருமணத்திற்கு அவரது கணவரோடு சென்று கொண்டிருக்கும் போது கோழிப்போர்விளை பள்ளியாடி சாலையில் குழிக்கோடு சந்திப்பு அருகே சென்ற

போது எதிரே TN 75 S 4223 என்ற இரு சக்கர வாகனத்தை 1வது எதிர்மனுதாரர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனமில்லாமலும் ஓட்டி வந்து இறந்து போன நபரும் மனுதாரரும் பயணம் செய்த TN 74 Z 5215 வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகத் தெரியவருகிறது. ம.சா.1ன் சாட்சியத்திலிருந்தும் ம.சா.ஆ–1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களிலிருந்தும் தெளிவாகத் தெரிய வருகிறது. விபத்திற்கு காரணமான 1வது எதிர்மனுதாரர் மீது தக்கலை காவல்நிலைய குற்ற எண். 473/2018 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.1க்கும் விபத்து சமயம் காயம் ஏற்பட்டுள்ளது. காயம்பட்ட ம.சா.1ன் சாட்சியம் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ள நிலையில் 1வது எதிர்மனுதாரிான் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என 1வது எதிர்மனுதாரர் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே விபத்தானது 1வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் இவ்வழக்கு வாகன விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை மனுதாரர்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்துள்ளார்கள் என்றே இத்தீர்ப்பாயம் பிரச்சினை எண்.1 –ற்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

<u>பிரச்சினை எண். 2</u>

7. இவ்வழக்கு விபத்தானது 1வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து நடைபெற்றது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இந்நிலையில் விபத்திற்கு காரணமான TN 75 S 4223 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் 1ம் எதிர்மனுதாரர் ஆவார். அந்த வாகனத்தின் உரிமையாளர் 2ம் எதிர்மனுதாரர் ஆவார். 2வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான இரு சக்கர வாகனம் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளபடியால் 1வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் காப்பிடு நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனவே 3 எதிர்மனுதாரர் தான்

மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகை வழங்க கடமைப்பட்டவர்கள் என்று பிரச்சினை எண்.2 –ற்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

**<u>பிரச்சினை எண். 3</u>**

**8. <u>வருமான இழப்பீடு</u>**

மனுதாரர்கள் வழக்குப்படி இறந்து போன கிறிஸ்டோபர் செல்வராஜ் விபத்து சமயம் வயது 55 ஆகும். அவரது பிரேத பரிசோதனை அறிக்கையான ம.சா.ஆ–5 ல் இறந்து போனவரின் வயது 55 என குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் 2018ம் ஆண்டு நடைபெற்றுள்ளது. இறந்து போனவிான் மாத வருமானம் ம.சா.ஆ–12ன் படி ரூ–39322/– ஆகும். எனவே மாண்புமிகு மேலமை நீதிமன்றம் **" Smt. Sarala Varma and others /Vs/ Delhi Transport Corporation and another " reported in 2009 (2) TNMAC page 1 (SC)** வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் இறந்துபோன நபரின் சொந்த செலவிற்காக மொத்த வருமானத்தில் 1/3 பாகம் கழித்தும் கீழ்கண்டவாறு வருமான இழப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் இறந்து போன நபரின் வயது 55 என்பதால் அவருக்கு பெருக்கி 11 ஆகும். வருமான இழப்பீடாக ரூ. 13107/– X 12 X 11 = ரூ.17,30,000/–கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**9. <u>மருத்துவ செலவினம்</u>**

விபத்தில் காயமடைந்த கிறிஸ்டோபர் செல்வராஜ் 5.11.2018 முதல் 20.11.2018 வரை அனந்தபுரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு உயிர்காக்கும் சிகிச்சைகள் வழங்கப்பட்டும் பலனளிக்காமல் 20.11.2018 ம் தேதி இறந்து போய் உள்ளார். மேற்படி காலத்தில் ம.சா.ஆ–6ன் படி ரூ.3,53,050/– மருத்துவ செலவினமாக ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையை மனுதாரர்களுக்கு மருத்துவ செலவினமாக வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**அன்பு மற்றும் பாசம் இழப்பிற்காக**

10. மனு விபத்தில் இறந்து போன கிறிஸ்டோபர் செல்வராஜ் 1வது மனுதாரர் மனைவி, 2, 3 வது மனுதாரர்கள் மகன்கள் ஆவார்கள். எனவே அன்பு மற்றும் பாச இழப்பீட்டிற்காக 1 வது மனுதாரருக்கு ரூ-40,000/- மும், 2, 3 மனுதாரர்கள் அவர்களது தந்தையை இழந்தமைக்காக தலா ரூ.40,000/- அன்பு மற்றும் அரவணைப்புக்காக (Loss of consortium) என்ற தலைப்பின் கீழ் கிடைக்கத்தக்கது என்றும் ஈமக்கிரியை செலவினத்திற்காக (funeral expenses) ரூ.15,000/- கிடைக்கத்தக்கது என்றும், உடமை இழப்புக்காக (Loss of Estate) ரூ.15,000/- மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

11. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் மனுதாரர்களுக்கு கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் இழப்பீட்டு தொகை வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

| | | |
|---|---|---|
| சார்பு நிலை வருமான இழப்பீடு | - | ரூ. 17,30,000 /- |
| அன்பு மற்றும் அரவணைப்புக்காக | - | ரூ. 1,20,000/- |
| ஈமக்கிரியை செலவினம் | - | ரூ. 15,000/- |
| உடமை இழப்பிற்காக | - | ரூ. 15,000/- |
| மருத்துவ செலவினம் | - | ரூ. 3,53, 050/- |
| | | ------------ |
| **மொத்தம்** | - | **ரூ. 22,33,050/-** |
| | | ------------ |

12. எனவே மனுதாரர்களுக்கு ரூ**22,33,050** .- இழப்பீடாக வழங்கலாம் என தீர்வு கண்டு பிரச்சனை 3-க்கு இத்தீர்ப்பாயம் விடை காண்கிறது.

13. எனவே மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீடாக ரூ. **22,33,050/–**க்கு மனு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டி மற்றும் செலவுத்தொகையையும் சேர்த்து மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டுமென்றும் மேற்படி இழப்பீட்டு தொகையில் 1ம் மனுதாருக்கு ரூ.10,33,050/–மும், அதற்குரிய விகிதாசார வட்டி மற்றும் செலவுதொகையும் கிடைக்கத்தக்கது என்றும், 2, 3வது மனுதாரர்களுக்கு தலா ரூ.6,00,000/– வீதமும் அதற்குரிய விகிதாசார வட்டி மற்றும் செலவுதொகையும் கிடைக்கத்தக்கது என்றும் இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக,**

1. இம்மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. 3வது எதிர்மனுதாரர் மொத்த இழப்பீட்டு தொகை ரூ.**22,33,050**/–ஐ வழங்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை இம்மனு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து தொகை வைப்பீடு செய்யும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டி மற்றும் செலவுத் தொகையையும் சேர்த்து இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் (சார்பு நீதிமன்றம், பத்மனாபபுரம்) இந்தியன் வங்கி, நடப்பு கணக்கு எண் 6541018634–ல் நேரடியாக NEFT/RTGS மூலம் 3வது எதிர்மனுதாரர் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும் மேற்படி இழப்பீட்டு தொகையில் 1ம் மனுதார ரூ.10,33,050/–மும், அதற்குரிய விகிதாசார வட்டி மற்றும் செலவுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்றும், 2, 3வது மனுதாருக்கு தலா ரூ.6,00,000/– வீதமும் அதற்குரிய விகிதாசார வட்டி மற்றும் செலவுதொகையும் கிடைக்கத்தக்கது என்றும், உத்தரவிடப்படுகிறது.

2. 3 வது எதிர்மனுதாரர் மேற்படி இழப்பீட்டு தொகையை மேற்கண்டவாறு வங்கியில் செலுத்திய பின்னர் வங்கி அறிவுறுத்தல் நகலை (Copy of Bank Advice) கடிதம் மூலம் இத்தீர்ப்பாயத்திற்கும், அதன் மற்றொரு நகலை மனுதாரர்கள் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப உத்தர விடப்படுகிறது.

3. மனுதாரர்கள் இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவு தொகையில் பாதித்தொகையை உடனடியாக பெற்றுக் கொள்ளலாம் என்றும், மீதமுள்ள பாதி தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் 3 ஆண்டுகள் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

4. மனுதாரர்கள் இழப்பீட்டு தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றக்கட்டணம் செலுத்தும் வரை மனுதாரர்கள் வட்டி பெற உரிமையில்லை என்றும் உத்தரவிடப்படுகிறது.

5. வழக்கறிஞர் கட்டணம் ரூ.29,330/- நிர்ணயம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| வங்கியின் பெயர் | : | இந்தியன் வங்கி, தக்கலை |
| நடப்பு கணக்கு எண் | : | 6541018634 |
| IFSC Code | : | IDIB000T140 |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு,

2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 05 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.06.08 16:41:39 +0530

மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்/
சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>:**

| | | |
|---|---|---|
| ம..சா.1 | – | திரு.பெஸிதா ஜெயமோகனா |
| ம.சா.2 | – | திரு. சதீஸ்குமார் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>.**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.1 | – | திரு. மகேஷ்குமார் |
| எ.ம.சா.2 | – | திரு. தர்மாஜன் |

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 21.11.2018 தேதியிட்ட முதல்தகவல் அறிக்கை |
| ம.சா.ஆ.2 | 21.11.2018 தேதியிட்ட பார்வை மகஜர் |
| ம.சா.ஆ.3 | 21.11.2018 தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| ம.சா.ஆ.4 | 01.12.2018 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| ம.சா.ஆ.5 | 22.11.2018 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை |
| ம.சா.ஆ.6 | மருத்துவபில் எண்ணம் 1 அசல் |
| ம.சா.ஆ.7 | 23.11.2018 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் கணினி நகல் |
| ம.சா.ஆ.8 | 11.01.2019 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் கணினி நகல் |
| ம.சா.ஆ.9 | 2018ம் வருடம் அக்டோபர் மாதத்திற்குரிய சம்பள சான்றிதழ் அசல் |
| ம.சா.ஆ.10 | ஆதார் அடையாள அட்டை |
| ம.சா.ஆ.11 | வங்கி கணக்கு புத்தகம் |
| ம.சா.ஆ.12 | 14.03.2024 தேதியிட்ட சம்பள சான்றிதழ் உண்மை நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | TN 75 S 4223 பதிவு எண் கொண்ட வாகனத்தின் காப்பீட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.2 | வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய அனுமதி கடிதம் |
| எ.ம.சா.ஆ.3 | 1வது எதிர்மனுதாரர் சாலமன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கு ஆய்வு செய்த அறிக்கை |
| எ.ம.சா.ஆ.4 | ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்பதற்கு வழங்கப்பட்ட சான்று |
| எ.ம.சா.ஆ.5 | TN 74 Z 5215 இரு சக்கர வாகனத்தின் பதிவு சான்று நகல் |

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2026.06.08 16:41:48 +0530

சா.நீ.
பத்மநாபபுரம்